# மணிமேகலையும், இஸ்லாமும் போதிக்கும் விருந்தோம்பல் அறம் - ஓர் ஒப்பியல் நோக்கு

# Hospitality Virtue as Taught in *Manimekala* and Islam - A Comparative Perspective

முருகையா சதீஸ் / Murukaiya Sathees[1]


## Abstract

Literature and religion play a major role in the teaching of the virtues of human life. These include a Buddhist textbook entitled *Manimekalai*, and the Islamic religion followed by the Muslims. This comparative study aims to examine the virtue of hospitality as portrayed in *Manimegalai* and as preached by the Islamic religion via Quran and Hadith, the biographical forms of the Messenger of God. Hunger is a natural feel invoked in all living beings and the hungry need hospitality to cease this hunger; thus, hospitality is always hailed as the highest virtue one could and should possess. This descriptive paper entails the findings of the comparative study between Quran, Hadith, and *Manimekalai*; other sources such as related essays, journals and electronic commentaries concerning Quran, Hadith, and *Manimekalai* are also incorporated in the research. Both *Manimekalai* and the Islamic religion promote the virtue of hospitality as the quickest route to attain world peace.



Date of submission: 2021-06-05
Date of acceptance: 2021-06-27
Date of Publication: 2021-07-20


Corresponding author's Name: Murukaiya Sathees
Email: satheesmurukaiya@gmail.com


**Key Words:** Manimekalai, Islam, Hospitality, Comparative, Kappiyam.

### அறிமுகம்

உலகளாவிய நோக்கில் இலக்கியப் படைப்புக்களின் பொதுமையை ஒப்பிட்டுக்காண ஒப்பியல் இலக்கியம் முயல்கின்றது. மொழி, நாட்டு எல்லைகளையும் கடந்து 'இலக்கியங்கள் ஒற்றுமைத் தன்மைகளைப் பிரதிபலிக்கின்றன' என்ற கருதுகோளை முன்னிறுத்தி, இவை ஆய்வினை முன்னகர்த்துகின்றன. மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனாரால் படைக்கப்பட்ட மணிமேகலைக் காப்பியம், அறக்கருத்துக்களை வலியுறுத்துவதனூடாகப் பௌத்தமத உண்மைகளையும் போதிக்கிறது. முப்பது காதைகளையும், 4856 அடிகளையும் கொண்டு அமைந்து உயர் அறங்களை நிலைநிறுத்துகின்றது. சாத்தனார் வாழ்ந்த களப்பிரர் ஆட்சிக்காலம்;, செல்வச்சீரழிவு, தார்மீக வீழ்ச்சி, அரசியல் நெறி பிழைத்தல் முதலிய பல சீர்கேடுகள் நிலவிய காலம். அதனால் அவற்றைத் தம் காப்பியத்தில் எடுத்துக் காட்டித் தீர்வு காணவும் முற்பட்டார். மக்கட் சமுதாயத்தைப் பிடித்து வருத்திக் கொண்டிருந்த பசிப்பிணி எனும் கொடிய பிணியை மாற்ற வேண்டும் என்ற உயர்ந்த நோக்குடன் காப்பியத்தினைப் படைத்து மணிமேகலையை அப்பணியில் ஈடுபடுத்தினார்.

இஸ்லாமிய மதப்பண்பாட்டின் படி, உலகில் மனிதன் உயர்ந்த இலக்குக்களுடன் வாழவே அனுப்பப்பட்டதாக் கூறுவர்.

[1] The author is a lecturer in the Department of Tamil, University of Jaffna. satheesmurukaiya@gmail.com

அவ்விலக்குகளைக் கற்றுக்கொடுப்பதற்காகத் தூதர்களையும், அவர்களினூடாக வேதங்களையும் இறைவன் அருளினான். இச்சிறப்புடைய 'இஸ்லாம்' என்ற சொல் 'ஸலாம்' என்ற வினையடியிலிருந்து பிறந்து சாந்தி, சமாதானம் உட்பட்ட பல நல்லறங்களைப் போதிக்கின்றது. அவற்றுள் விருந்தோம்பலும் மிக முக்கிய கடமையாக வலியுறுத்தப்பட்டுள்ளது. "யார் அல்லாஹ்வையும், இறுதிநாளையும் நம்புகிறாரோ, அவர் தனது விருந்தினரைக் கண்ணியப்படுத்தட்டும்" (புகாரி, முஸ்லிம்) என்று நபி (ஸல்) அவர்கள் கூறுகிறார். விருந்தினரை உபசரிக்காதவரிடம் இறை நம்பிக்கையும், மறுமை நம்பிக்கையும் இருக்க முடியாது என்பது இங்கு வெளிப்படுத்தப்படுகின்றது. எனவே விருந்தோம்பல் ஈமானின் ஒரு அங்கம் என்பதை இஸ்லாம் வலியுறுத்துகின்றது.

களப்பிரர் ஆட்சி தமிழகத்தில் நிகழ்ந்த சூழலில் சீரழிந்து கிடந்த தமிழகத்து மக்களை தம் மதக்கருத்தினூடாக நன்னெறிப்படுத்த 'மணிமேகலை' தோன்றிய நிலையில், அறியாமையில் மூழ்கிச் சீரழிந்த அராபியச் சூழலை மேன்நிலைப்படுத்த கி.பி ஏழாம் நூற்றாண்டளவில் முஹம்மது நபி (ஸல்) அவர்கள் இறுதித் தூதராக அகிலத்திற்கு அனுப்பப்பட்டார்கள். இவ்விருவரது சமூகச் சூழலும் ஒன்றாக இருந்ததுடன், சமூக நல்வழிப்படுத்தல்களுக்காகத் தம்மை இருவரும் அர்ப்பணித்தனர். எனவே மணிமேகலையும், இஸ்லாமும் மனித வாழ்வை நன்னெறிப்படுத்துவதனூடாக விருந்தோம்பலையும் போற்றுகின்றது. இதனால்; மணிமேகலையும், இஸ்லாமும் கூறும் விருந்தோம்பல் அறத்தினை ஒப்பியல் அணுகுமுறையூடாக இவ்வாய்வு மிகச் சுருக்கமாக ஆராய்கிறது.

## ஆய்வு நோக்கம்

மணிமேகலை கூறுகின்ற விருந்தோம்பல் அறத்தினையும், இஸ்லாம் வலியுறுத்தும் விருந்தோம்பல் கடமையையும் ஒப்பியல் அணுகுமுறை ஊடாக ஆராய்வதை இவ்வாய்வு நோக்காகக் கொண்டுள்ளது.

## ஆய்வு முறையியல்

இவ்வாய்வானது பண்புசார் முறைமையைக் கொண்டமைந்து, விபரணப் பகுப்பாய்வு முறை, ஒப்பியல் முறை, ஆகிய அணுகுமுறைகளைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாய்விற்குரிய தரவுகளாக, மணிமேகலை, அல்குர்ஆன், ஹதீஸ் முதலியவை பயன்படுத்தப்பட்டுள்ளதுடன், கட்டுரை நூல்கள், இதழ்கள், மின்னூடகக் கருத்துக்கள் போன்றவையும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

## அறத்தில் சிறந்த அறம்

அறம் என்று சிறப்பித்துச் சொல்லப்படுவது உலகில் உறையும் உயிர்களுக்கெல்லாம் உணவு, உடை, உறையுள் இவைகளைக் கொடுத்து உதவுவதுதான் சிறந்த அறமாகும் என்பதை மணிமேகலைக் காப்பியம் போதிக்கிறது. இவற்றைத்தவிர உயர்ந்த அறம் வேறு இருப்பதாகத் தெரியவில்லை என்பதனையும் வலியுறுத்துகின்றார் சாத்தனார். இதனை,

"அறம் எனப்படுவது யாது எனக் கேட்பின்
மறவாது இதுகேள்: மண் உயிர்க் கெல்லாம்
உண்டியும், உடையும், உறையுளும் அல்லது
கண்டது இல்"
(காதை.25:228 231)

என்ற செய்யுளடிகள் எடுத்துக் காட்டுகின்றன. இவ்வடிகள் உணவளித்தலே தலைசிறந்த தர்மம் என்று உரைத்தன. உடையற்றோர்க்கு உடையும், இடமில்லாதவர்களுக்கு இடமும் அளிப்பது, உணவளிப்பதுடன் ஒட்டிய அறமாகும் என்றும் வலியுறுத்தப்படுகின்றது.

இஸ்லாத்திலும் விருந்தோம்பல் சிறந்த அறமாகவே கொள்ளப்படுகின்றது. விருந்தினரை உபசரித்தல் என்பது பலவகையான அர்த்தங்களைக் கொண்டதாகும். விருந்தினருக்கு உணவளிப்பது மட்டுமல்லாமல் அவர்களுக்குத் தேவையான வசதிகளையும் செய்து கொடுப்பதும் உபசரிப்பில் அடங்கும். வீட்டிற்கு யாரும் விருந்திற்கு வந்தால் முதலில்

அவர்களுக்கு "ஸலாம்" கூறி வரவேற்க வேண்டும். அவருக்காக இறைவனிடம் நலம் விசாரித்துக் கொள்ள வேண்டும் என்கிறது இஸ்லாம்.; வீட்டிற்கு விருந்தினர் வந்தவுடன் 'நபி இப்ராகீம்', அவர்களுக்குத் தேவையான உணவுகளை ஏற்பாடு செய்தார்கள். ஒரு காளைக்கன்றைப் பொரித்து விருந்தினருக்கு முகம் மலரக் கொடுத்தார்கள். இதனை,

"...அறிமுகம் இல்லாத ஆட்களாக இருக்கிறார்களே என்று எண்ணி, பின்னர் அமைதியாக தம் வீட்டிற்குச் சென்றார். (பொரிக்கப்பட்ட) கொழுத்த காளைக்கன்றைக் கொண்டுவந்து அதை விருந்தினர் முன் வைத்தார்" (51:25) என்று திருமறை கூறுகின்றது. விருந்தினருக்குத் தெரியாமல் தன்னுடைய இல்லத்தாரிடம் விருந்து உபசரிப்பை மறைமுகமாக 'இப்ராகீம் நபி' மேற்கொள்ளச் சொன்னார் என்பது இங்கு முக்கியமான செய்தியாகும். நாம் என்ன செய்யப் போகிறோம் என்பதை அறிந்தால், விருந்தினர்கள் விருந்தை மறுத்துவிடக் கூடும் என்பதால்தான் இந்த இரகசிய ஏற்பாட்டை மேற்கொண்டார் எனலாம்.

"சகோதரர்களே! இவர்கள் என்னுடைய விருந்தாளிகள். என்னை அவமானப்படுத்தி விடாதீர்கள். அல்லாஹ்விற்கு அஞ்சுங்கள். என்னை இழிவுபடுத்தி விடாதீர்கள்" (குர்ஆன். 15: 68) என்ற 'லூத்' அவர்களின் கூற்று இங்கு முக்கியமானதாகும். வீட்டிற்கு வரும் விருந்தினர்களை நாம் கண்ணியப் படுத்த வேண்டும். நீங்கள் அவர்களைக் கண்ணியப்படுத்துவது உண்மையில் நீங்கள் உங்களைக் கண்ணியப்படுத்திக் கொள்வதாகும் என்கிறது திருமறை. அவர்களுக்கு ஏதாவது கண்ணியக் குறை ஏற்பட்டால் அதைக் களையத் துணிவுடன் களம் இறங்க வேண்டும் என்றும் கூறுகிறது. எனவே இத்தகைய கருத்துக்கள் விருந்தோம்பல் அறத்தின் சிறப்பினை எடுத்துக்காட்டுகின்றது.

## உணவளிப்பவர் – உயிர் காப்பவர்

பசித்தோர்க்கு உணவு கொடுக்க வேண்டும் என்னும் நல்லறத்தையே பண்டைய நூல்கள் எல்லாம் வலியுறுத்துகின்றன. மணிமேகலை நூல் இந்த ஒரே கொள்கையைத்தான் எல்லாவற்றிலும் சிறப்பாக எடுத்துரைக்கின்றது. கதாநாயகியான மணிமேகலை பசித்த உயிர்களுக்கெல்லாம் உணவிட்டுக் காப்பதையே கடமையாகக் கொண்டாள். இவ்வுலகில் வாழும் மக்கள் அனைவரும் பட்டினியால் வருந்திச் சாகாமல் உணவளிக்க வேண்டும். இவ்வாறு உணவளிப்பவர்கள் "உயிர் கொடுத்துக் காப்போர்" ஆவார். இதனையே,

"மண்திணி ஞாலத்து வாழ்வோர்க் கெல்லாம்

உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே" (காதை. 11 : 95 96)

என்று மணிமேகலை கூறுகின்றது.

இஸ்லாத்திலும் உணவு கொடுத்து உயிர் காக்கவேண்டிய கருத்துக்கள் வலியுறுத்தப்பட்டுள்ளன. உலகில் பிறந்த அனைத்து ஜீவராசிகளுக்கும் இறைவனே உணவளிக்கிறான். ஆகவே நாங்களும் கடமைதவறாது அதனைக் கடைப்பிடிக்க வேண்டும். "எந்த உயிரினமும், அதற்கான உணவு அல்லாஹ்வின் மீது (பொறுப்பாக) இருந்ததே தவிர பூமியில் இல்லை. இன்னும் அவை தங்கும் இடத்தையும், அவை அடங்கும் இடத்தையும் அவன் அறிவான்" (குர்ஆன். 11: 6) என்ற திருமறையின் கூற்று போற்றுதற்குரியதாகும். மேலும்,

"வறுமைக்கு அஞ்சி உங்கள் குழந்தைகளைக் கொல்லாதீர்கள், நாமே உங்களுக்கும் உணவு அளிக்கிறோம். அவர்களுக்கும் அளிப்போம்." (குர்ஆன். 6: 151) என்று திருமறையின் இறை வசனம் கூறுகிறது. எனவே உணவைக் கொடுத்து உயிர்களை அல்லாஹ் காப்பாற்றுவதைப் போல நாமும் ஜீவராசிகளுக்கு உணவளித்து உயிர்காக்க வேண்டும் என்ற சிந்தனையை இஸ்லாம் முன்வைக்கிறது எனலாம்.

## பசிப்பிணி மருந்து

மணிமேகலையின் ஆசிரியர் "ஆருயிர் மருந்து" என்று உணவைக் குறிப்பிடுகின்றார். மணிமேகலையில் ஏழு இடங்களில் உணவைக் குறிப்பிடும் போது "ஆருயிர் மருந்து" என்னும்

தொடரால் அழைக்கின்றார். சாத்தனாரும் "ஆதிரை இட்டனள் ஆருயிர் மருந்து" என்றும் "ஊண் உடைய மாக்கட்டு உயிர் மருந்து இது" என்றும் குறிப்பிடுகின்றார். மேலும் இப்பசிப்பிணிக்குரிய உணவுக்கொடையை இரு வழிகளில் விளக்குகின்றார் சாத்தனார். ஆபுத்திரன் கதை மற்றும் மணிமேகலையின் அறப்பணி முதலியவற்றின் மூலம் உணவுக்கொடை விளக்கப்பட்டுள்ளன. மக்கள், தேவர் என்ற இருவருக்கும் ஏற்ற ஒரு முடிவான அறம் உயிர்களின் பசிப்பிணியை நீக்குவதுதான். இதுவே மிகப்பெரிய நல்ல தர்மம் என்று அறவண அடிகள் மூலம் மணிமேகலைக்குக் கூறப்படுகின்றது. இதனை,

*"மக்கள் தேவர் என இரு சார்க்கும்*

*ஒத்த முடிவின் ஓர் அறம் உரைக்கேன்;*

*பசிப்பிணி தீர்த்தல் என்றே அவரும்*

*தவப்பெரு நல்லறம் சாற்றினர்" (காதை.12 : 115 118) என்ற*

பாடலடிகள் மூலம் கண்டு கொள்ளலாம்.

இஸ்லாமும் பசிக்கு மருந்தாகிய உணவின் உபசரிப்பினையும் உணவின் அவசியம் பற்றியும் வலியுறுத்துகின்றதை அவதானிக்க முடிகின்றது. யாரும் வீட்டிற்கு வந்தால் அவர்களை 'நபி (ஸல்)' அவர்களே நேரில் உபசரிப்பது வழக்கமாகும். விருந்தினர் உணவருந்தும் போது தாமும் அவர்களோடு அமர்ந்து கொண்டு 'இன்னும் கொஞ்சம் உண்ணுங்கள்" என்று நபி (ஸல்) கூறிக்கொண்டே இருப்பார்கள்.

விருந்தினர்கள் திருப்தியாகச் சாப்பிட்டு முடித்துவிட்டு எப்போது "போதும்" என்று மறுக்கிறார்களோ அப்போது நபிகளாரும் வற்புறுத்துவதை விட்டுவிடுவார்கள். மேலும் விருந்தினருக்குக் குறிப்பிட்ட நேரத்தில் உணவைப் பரிமாற வேண்டும். விருந்தினரோடு உணவு அருந்தும் போது நாம் அவசர அவசரமாக சாப்பிட்டு முடித்துவிடக்கூடாது. எம்மைப்பார்த்து அவர்கள் அரைகுறையாகச் சாப்பிடக் கூடும். அவர்கள் கை அலம்பிய பிறகே நாம் கை அலம்ப வேண்டும் என்கிறது இஸ்லாமிய தர்மம்.

"உணவுத்தட்டு வைக்கப்பட்டால் அது தூக்கப்படும் வரை எவரும் எழக்கூடாது. தனக்கு வயிறு நிரம்பி விட்டாலும் கூட்டத்தினரின் வயிறு நிரம்பும் வரை தனது கையைத் தட்டிலிருந்து எடுக்கக் கூடாது. ஏனெனில் அவருடன் சாப்பிடுபவருக்கு உணவுத் தேவையிருக்கும். நிலையிலே வெட்கப்பட்டு தனது கையை அவர் எடுத்துவிடக்கூடும்" (இப்னுமாஜா) என்று நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். அதுமட்டுமல்லாது விருந்தினர்களை வீட்டிற்கு வெளியே வந்து வரவேற்று அழைத்துச் செல்வதும், அவர்கள் திரும்பிச் செல்லும் போது வாசல் வரை சென்று வழியனுப்பி வைப்பதும் சிறப்பானதாகும். (இப்னுமாஜா). உணவு என்பது மருந்தாகும். அதனைச் சாப்பிடும் போது அல்லாஹ்வின் பெயரால், வலது கையால் உண்ண வேண்டும். தட்டின் முன்பகுதியில் இருந்து உண்ண வேண்டும். இதனை,

"நான் நபி (ஸல்) அவர்களிடம் சென்றேன். அவர்களிடம் உணவு இருந்தது. அன்பு மகனே! நெருங்கி வா! அல்லாஹ்வின் பெயரைக் கூறு! உன் வலது கையால் சாப்பிடு! உனக்கு முன்னால் உள்ள பகுதியிலிருந்து சாப்பிடு! என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்." (புகாரி, முஸ்லிம்) என்ற திருக்கூற்று உறுதி செய்கிறது. எனவே மனிதனுக்கு பசிப்பிணியை நீக்க நல்மருந்து, அகம்மகிழ்ந்து உண்ணும் விருந்து என்பது இஸ்லாம் போதிக்கும் உயர்ந்த அறமாகும். எனவே எல்லோருக்கும் பகிர்ந்துண்டு வாழவேண்டும்.

### வறியோர்க்கு உதவுதல்

உண்மையில் உணவில்லாமல் தவிக்கும் வறியோர்க்கே உணவளிக்க வேண்டும். வேறு வேலை செய்து பிழைக்க முடியாத நோயாளிகள், அங்கம் பழுதடைந்தோர் போன்றவர்களைக் காப்பதுதான் நல்லறம். நாம் செய்யும் உதவிக்கு மாற்றுதவி செய்யும் ஆற்றல் படைத்தோருக்கு உதவுவது அறம் என்ற துறையில் அடங்காது. இவ் உண்மையை மணிமேகலை எடுத்துக் காட்டுகின்றது. மணிமேகலையிலும் ஆபுத்திரன் வறியோர்க்கு உணவு கொடுப்பது

காட்டப்படுகின்றது.

ஆபுத்திரன், குற்றமற்றோர் வாழும் வீடுகள் தோறும் சுற்றித்திரிந்து பிச்சை எடுப்பான். அதனைப் பரிமாறி உண்ணும் பொருட்டு, "கண்தெரியாதவர்களே! காதுகேட்காதவர்களே! கால் முடம்பட்டு நீண்ட வழி நடக்க முடியாதவர்களே! ஆதரவற்ற அநாதைகளே! பிணியால் வருந்துகின்றவர்களே! அனைவரும் உணவுண்ண வாருங்கள்" என்று கூவி அழைப்பான். அவனிடம் வந்து கூடுகின்றவர்களுக்கெல்லாம் அன்னம் இடுவான். மீதப்பட்ட உணவையே தான் உண்பான். (காதை.13 : 109 113). இதனால் உணவு பெறத்தக்கவர் யார் என்பதை அறியலாம்.

மணிமேகலை அமுதசுரபியைக் கையில் ஏந்தி, எல்லா உயிர்களும் உணவுண்ண வருக என்று அழைப்பாள். கண் தெரியாதவர்கள், காதுகேட்காதவர்கள், கால் நொண்டியானவர்கள், அநாதைகள், ஊமைகள், நோயாளிகள், தவக்கோலமும் விரதமும் உடையவர்கள், பசிநோயால் வருந்தியவர்கள், சோம்பலால் வறுமையுற்றவர்கள் யாவரும் வந்து கூடுவார்கள். நூறாயிரம் விலங்கினமும் வந்து சூழும். ஏனைய உயிர்களும் வந்து சுற்றிக் கொள்ளும். இவர்களுக்கெல்லாம் மணிமேகலை உணவிடுவாள். அவள் கொடுக்கும் உணவை அவர்கள் உண்பார்கள் அவ்வுணவு உயிரைக் காக்கும் மருந்தாக இருந்தது. சோறு கொடுப்பதில் அவள் சோர்வடையவே இல்லை. இச்செய்திகளை,

"அங்கையின் ஏந்திய அமுதசுரபியை

வைத்து நின்று 'எல்லா உயிரும் வருக' என..

காணார், கேளார், கால் முடப்பட்டோர்..."
(காதை.28 : 218 235)

என்ற பாடலடிகள் மூலம் சாத்தனார் வெளிப்படுத்துகின்றார்.

இஸ்லாத்திலும் ஏழைகளுக்குக் கொடுக்கும் விருந்தின் அவசியம்; பற்றிய செய்திகள் காணப்படுகின்றன. "செல்வந்தர் மட்டும் அழைக்கப்பட்டு ஏழைகள் புறக்கணிக்கப்படும் விருந்துதான் விருந்துகளில் மிகவும் கெட்டதாகும்" (புகாரி, முஸ்லிம்) என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். மேலும் ஒரு குட்டி போட்ட ஆடு நபி (ஸல்) அவர்களுக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டது.

நபி (ஸல்) அவர்கள் அதன் பாலைக் குவளையில் குடித்தார். அவர்களின் வலது புறத்தில் கிராம வாசிகளும், இடது புறத்தில் அபூபக்கர் (ரலி) அவர்களும் அமர்ந்திருந்தனர். அப்போது உமர் (ரலி) அவர்கள் "அல்லாஹ்வின் தூதரே! முதலில் அபூபக்கருக்கு வழங்குங்கள்" என்றார்கள். ஆனால் தன் வலது புறத்திலிருந்த கிராமவாசிகளுக்கு (அந்தக் குவளையை) கொடுத்துவிட்டு "வலது புறம், வலதுபுறமாகவே வழங்க வேண்டும்" என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (புகாரி, முஸ்லிம்) இங்கு அந்தப் பால் யாருக்கு முதல் கொடுக்கப்பட வேண்டும் என்பதையும் எந்தப் பக்கத்தால் வழங்கப்பட வேண்டும் என்பதையும் நபி (ஸல்) அவர்கள் விளக்கியுள்ளார்கள் எனலாம். மேலும்,

"இறந்தவரின் குடும்பத்தினரிடம் கூட்டமாகக் கூடுவதையும், அடக்கம் செய்யப்பட்டபின் விருந்து தயாரிப்பதையும் ஒப்பாரி வைப்பதன் ஒரு வகையாக நாங்கள் கருதி வந்தோம்" (அஹ்மத்) என்பதன் மூலம் துக்கத்தில் இருப்பவர்களுக்கு நாங்களே விருந்து வழங்க வேண்டும். அவர்கள் துன்பத்தில் ஆழ்ந்து இருப்பதால் அவர்களிடம் நாம் ஒன்றையும் எதிர்பார்க்கக் கூடாது என்பதையும் இஸ்லாம் வலியுறுத்துகின்றது.

"அல்லாஹ்வின் மீதுள்ள அன்பின் காரணமாக ஏழைகளுக்கும் அனாதைகளுக்கும், சிறைப்பட்டவர்களுக்கும் உணவளிப்பார்கள்" (குர்ஆன். 76 : 8) என்ற திருமறையின் கூற்றின்வழி ஏழைகளுக்கும், அனாதைகளுக்கும், சிறையில் வாடுபவர்களுக்கும் உணவளிப்பது அல்லாஹ்வின் மீது காட்டும் கருணைக்குச் சான்றாகும் என்பது புலனாகின்றது. எனவே யார் யாருக்கு விருந்து கொடுப்பது அவசியம் என்பது இதனுடாக விளங்குகின்றது. ஆகவே

நாம் விருந்தோம்பலினூடாக ஏழைகளின் பசித்துயரைத் துடைக்க முன்வர வேண்டும்.

### உணவின் அவசியம்

உணவின் அவசியத்தினைச் சாத்தனார் "காயச்சண்டிகை"யின் கதைமூலம் எடுத்துக் கூறுவதைக் காணலாம். காயச்சண்டிகையானவள் "யானைத்தீ" என்னும் கொடும்பசியால் துன்புற்றாள். அமுதசுரபியிலிருந்து உணவைப் பெற்று உண்டவுடன் அவளுடைய பசிநோய் தீர்ந்தது. மேலும், மணிமேகலை காயசண்டிகை போல மாற்றுருவம் கொண்டு சிறையில் அனைவருக்கும் உணவளித்தாள். அதனைக் கேள்வியுற்ற சிறைக்காவலர்கள் வியந்து அரசனுக்குத் தெரிவித்தனர். மணிமேகலையும் பாத்திரத்தின் பெருமையை எடுத்துக்கூறினாள்.

*"தெய்வம் தந்தது திப்பியம் ஆயது*
*யானைத் தீ நோய் அரும்பசி கெடுத்தது*
*ஊன் உடைய மாக்கட்கு உயிர் மருந்து இது..."*

என மணிமேகலை கூறக்கேட்டு, அவளின் ஆலோசனையின் படி சிறைக்கோட்டத்தை அறக்கோட்டமாக்கினான், இச்செய்தியானது சமுதாயத்தில் உணவின் அவசியத்தை வலியுறுத்துகின்றது. அத்துடன் 28 தினங்கள் இந்திரவிழா நடக்கவிருக்கிறது. மேற்படி விழாவிற்காக முரசறைபவன் பல வேண்டுகோள்களை விடுத்து இறுதியாக,

*"பசியும் பிணியும் பகையும் நீங்கி*
*வசியும் வளனும் சுரக்கென வாழ்த்தி*
*அணிவிழா அறைந்தனன் அகநகர் மருங்கென்"*

என நிறைவு செய்கிறான். இவ்வேண்டுகோள்கள், அரசன் நிறைவேற்றவேண்டிய கடமைகளாகக் காட்டுகின்றார் சாத்தனார். நாட்டிலே நீக்க வேண்டிய விடயங்களாகப், பசி, பிணி, பகை என்பன கூறப்படுகின்றன. இம் மூன்று விடயங்களிலும் முன்னிற்பது பசி தீர்த்தலாகும். இதை மன்னனின் கட்டாய கடமையாகச் சாத்தனார் வலியுறுத்துவது சமூகத்தில் உணவின் அவசியத்தையும், விருந்தோம்பலின் சிறப்பினையும் எமக்குக் காட்டுகின்றது.

இஸ்லாம், விருந்தழைப்பை மறுப்பவர்கள் அல்லாஹ்விற்கும், தூதருக்கும் கட்டுப்பட்டவர்களாக இருக்கமுடியாது என்கிறது. விருந்திற்குப் பதிலளிப்பதும் கடமை என்று கூறுகின்றது. "யார் விருந்தழைப்பை ஏற்க மறுக்கிறாரோ, அவர் அல்லாஹ்விற்கும், அவனது தூதருக்கும் மாறு செய்து விட்டார்" (புகாரி, முஸ்லிம்) என்ற கூற்று இங்கு நோக்கத்தக்கது. மேலும், "ஒருவர் தனிநபரின் விருந்தினராகச் செல்லாமல் ஒரு கூட்டத்தாரிடம் விருந்தாளியாகச் சென்றால், அவருக்கு ஏதும் கிடைக்கவில்லையானால் அவருக்கு உதவுவது எல்லா முஸ்லிம்களின் மீதும் கடமையாகும்" (அஹமத்) என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

"நபி (ஸல்) அவர்கள் எந்த உணவையும் ஒருபோதும் குறைகாணமாட்டார்கள். அது விருப்பமானதாக இருந்தால் சாப்பிடுவார்கள். விருப்பமில்லையானால் விட்டுவிடுவார்கள்" (புகாரி, முஸ்லிம்) என்பதன் மூலம், விருந்திற்குச் செல்லும் போது குறைகள் இருந்தால் அதைச் சகித்தக்கொள்ள வேண்டும் என்பது விளங்குகின்றது. அத்துடன், "ஒரு அடியான் உணவைச் சாப்பிடும் போது அந்த உணவிற்காக அவனைப் புகழ்வதையும் அல்லாஹ் பொருந்திக் கொள்கிறான்" (முஸ்லிம்) என்பதும் சிறந்த நபி மொழியாகும். முஸ்லிம் அல்லாதவர்களின் வீட்டிற்கு விருந்திற்குச் செல்லும் போது, அவர்கள் கொடுக்கும் பாத்திரங்களில் சாப்பிடுவதும், சமைப்பதும் நபி (ஸல்) அவர்களால் தடுக்கப்படவில்லை என்பதை ஹதீஸ் தெளிவுபடுத்துகின்றது. "நபி (ஸல்) அவர்களோடு நாங்கள் போரிலிருந்த சமயம் இணைவைப்போரின் பாத்திரங்கள் கிடைத்தன. அதைத்தான் நாங்கள் உபயோகித்தோம். அது விஷமாக நபி (ஸல்) அவர்களால் குறை கூறப்படவில்லை" (அபூதாவூத்) எனச் சுத்தமானதாகப் பத்திரங்களைப் பயன்படுத்தி உணவுண்ண வேண்டும் என்று வலியுறுத்தப்படுகின்றது. எனவே இவை யாவும் உணவின் அவசியத்தை பறைசாற்றுகின்றன எனலாம்.

### உணவளிப்பதன் பயன்

பசித்தோர்க்குச் சோறு கொடுப்பவர்களே

மறுபிறப்பில் நல்லொழுக்கத்தைப் பின்பற்றுவோராகப் பிறப்பார்கள். அவர்கள் எல்லாப் பிறவிகளிலும் நல்லறங்களையே புரிவார்கள். இறுதியில் பிறவா நெறியை அடைவார்கள் என்றும் மணிமேகலை கூறுகின்றது. சென்ற பிறப்பிலே மணிமேகலை இராகுலன் என்பவனுக்கு மனைவியாக இருந்தாள். அப்போது அவள் 'சாதுசக்கரன்' என்னும் முனிவனை உபசரித்து உணவளித்தாள். அப்புண்ணியம் அவளைத் தொடர்ந்து நின்று, இறுதியில் அவள் பிறப்பு இன்றி முத்தி பெறுவதற்கு மூலமாயிற்று என்று உணவு அறம் மேற்கொண்டு பெற்ற பயன் கூறப்பட்டுள்ளது. இது அன்னதானத்தால் அடையும் பயனை வெளிப்படுத்திய கதை ஆகும். காப்பியத்தில் வரும் மற்றொரு உணவுக் கொடையாளனாகிய ஆபுத்திரனூடாகவும் உணவறத்தின் பயன்களைச் சாத்தனார் கூறுகின்றார். ஆபுத்திரனின் உணவுக் கொடையைக் கண்டு வியந்த இந்திரன் வரம் கொடுக்க வந்தபோது. "இந்திரனே நீ தருவதாகக்கூறிய வரங்களின் பயன்களை நான் உணவுத்தானம் செய்தபோதே பெற்றுவிட்டேன் என்கிறான்.

"வருந்தி வந்தோர் அரும்பசி களைந்து அவர்

திருந்து முகம் காட்டும் என தெய்வ கடிகை" (காதை.14: 44 45)

என்று ஆபுத்திரன் இந்திரனிடம் கூறினான். இவ்வாறு உணவு அறத்தின் பலனைக் கூறுவதனூடாக, உலக உயிர்கள் அனைத்திற்கும் உணவளித்தல் எனும் அறத்தைச் செய்ய வேண்டும் என்றும், குறிப்பாகப் பசிப்பிணியால் வாடுவோருக்கே செய்ய வேண்டும் என்றும் வலியுறுத்தப்படுகின்றது.

இஸ்லாம் பயனை எதிர்பார்த்து விருந்தோம்பலை வற்புறுத்தவில்லை. விருந்தளித்தல் என்பது பிரதியுபகாரமாகச் செய்யும் ஒன்றல்ல. எமது நற்பண்பை எடுத்துக்காட்டுவதற்காக செய்யப்படுவதாகும். "அல்லாஹ்வின் தூதரே! நான் ஒரு மனஜதரிடம் சென்ற போது, அவர் எனக்கு விருந்தளிக்கவில்லை. அதன் பின்னர், அவர் என்னிடம் வருகிறார். நான் அவருக்கு விருந்தளிக்க வேண்டுமா? அல்லது அவர் என்னிடம் நடந்து கொண்டதைப் போல் நடக்கட்டுமா?" என்று கேட்டேன். அதற்கு நபி (ஸல்) அவர்கள், "அவருக்கு விருந்தளிப்பீராக! என்றார்கள்" (திர்மீதீ) இதிலிருந்து ஒருவர் எப்படி எம்முடன் முன்பு நடந்து கொண்டார் எனப் பார்க்காமல் அவரை உபசரிக்க வேண்டும் என்ற நல்லறம் போதிக்கப்படுகின்றது. மேலும், "நாம் உங்களுக்கு உணவளிப்பதெல்லாம் அல்லாவின் முகத்தை நாடியேயன்றி, உங்களிடம் நாம் யாதொரு கூலியையோ அல்லது நன்றி செலுத்துவதையோ கருதவில்லை" (அல்குர்ஆன். 76 : 9) என்ற திருமறையின் கூற்றும், பயன் எதிர்பார்க்காத விருந்துக் கொடையினையே வலியுறுத்துகின்றமை குளிப்பிடத்தக்கது.

## முடிவுரை

மனித சமுதாயத்தினை நல்வழியின் பக்கம் நெறிப்படுத்தும் பொருட்டு காலத்திற்குக் காலம் செயற்பட்ட தனிமனிதர்களது அர்ப்பணிப்புக்கள் விலைமதிக்க முடியாதவையாகும். அந்த வரிசையில் சாத்தனார் அவர்களும், முஹம்மது நபி (ஸல்) அவர்களும் மிக முக்கியமானவர்கள். சீரழிந்த மனித வாழ்வுப்போக்கைச் சீர்திருத்தி விருந்தோம்பல் அறத்தினைப் போற்றும் நோக்கோடு மணிமேகலை படைக்கப்பட்டுள்ளது. அத்தகைய விருந்தோம்பல் சிந்தனைகள் இஸ்லாத்திலும் மிகுதியாகப் பொதிந்துள்ளன. இந்த நோக்குநிலையில் மணிமேகலையும், இஸ்லாமும் விருந்தோம்பல் அறத்தனூடாக நன்நெறி வாழ்விற்கு என்றும் வழிகாட்டுபவை என்பதை மையப்படுத்தி பஞ்சமற்ற சமூகத்தினைக் கட்டியெழுப்பும் பொருட்டு ஒப்பியல் அணுகுமுறையில் இவ்வாய்வு ஆராயப்பட்டுள்ளது. எனவே இலக்கியங்களிலும், சமயங்களிலும் பொதிந்துள்ள உயர் நீதிக்கருத்துக்கள் ஆய்வாளர்களால் ஆராயப்பட்டு இது போன்ற மேலும் பல ஆய்வுகள் முன்னெடுக்கப் பட வேண்டும் என்பதை இவ்வாய்வு பரிந்துரை செய்கின்றது.

## References

Seyapirakasu, N. (1999). *A new view of the Manimegalai*. Chennai: Vanathi Publishing House.

Varadaraja Iyer. (2007). *Manimegalai Thoughts*. Chennai: Kavya Publishing House.

Pasupathi, M.V. (1981). *Manimegalai Selvam*. Chidambaram: Annapurna Publishing House.

Sami Chidambaranar. (1960). *Manimegalai showing human life*. Chennai: Star Publication House.

Devira. (2007). *Tamil Literary Database*. Chennai: Sri Nandini Publishing House.

Rathinam, P. (1990). *Kaviya Manam*. Chennai: Poongodi Publishing House.

Parthibarajan, K. (2017). *Review Literatures*. Chennai: Parithi Publishing House.

Manikkam, V. (1958). *Double Epics*. Karaikudi: Selvi Publishing House.

Abdurrahman, M. (1998). *Islamic's Human Rights*. Saudi Arabia: Islamic Affairs and Ministry of Wakfu Call Guidance in Islam.

Pavas, Z.A.M. (2014). *Blessings to Allah and Gratitude of Servants*. Al Hasanath Monthly Magazine. Colombo: Alhasanat Publishing House.

Nihaal, M. (2015). *Become a Counselor in Justice*. Al Hasanath Monthly Magazine. Colombo: Alhasanat Publishing House.

jushup, K. (2012). *Islamic Politics*. Colombo: Al-Hasanath Publishing House.